செ.வெ.எண்: 22/அக்டோபர் நாள்: 17.10.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## மறுசீரமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 16.10.2020 அன்று மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்டு மறு சீரமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகளின் இறுதி பட்டியல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்பேரில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி, திருவாடானை, இராமநாதபுரம் மற்றும் முதுகுளத்தூர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. 2019 நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது மேற்குறிப்பிட்டுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 1,369 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 1,500 ஐ தாண்டுதல், 2 அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கிடையிலான மறுசீரமைப்பு, வாக்குச்சாவடி மையம் அமைந்துள்ள கட்டடத்தின் நிலை போன்ற பல்வேறு காரணங்களை கருத்தில் கொண்டு இம்மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி, மாவட்டத்தில் புதிதாக வாக்குச்சாவடிகள் ஏதும் உருவாக்கப்படவில்லை. 2 அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கிடையிலான பிரிவுகள் (Rearrangement of parts) காரணமாக பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 4 வாக்குச்சாவடி மையங்களில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரமக்குடி தொகுதிக்குட்பட்ட 18 வாக்குச்சாவடிகள், திருவாடானை தொகுதிக்குட்பட்ட 9 வாக்குச்சாவடிகள், இராமநாதபுரம் தொகுதிக்குட்பட்ட 2 வாக்குச்சாவடிகள், முதுகுளத்தூர் தொகுதிக்குட்பட்ட 5 வாக்குச்சாவடிகள் என 34 வாக்குச்சாவடி மையங்களின் அமைவிடங்கள் (Change of Location) மட்டும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல பரமக்குடி தொகுதிக்குட்பட்ட 4 வாக்குச்சாவடிகள், திருவாடானை தொகுதிக்குட்பட்ட 15 வாக்குச்சாவடிகள், முதுகுளத்தூர் தொகுதிக்குட்பட்ட 1 வாக்குச்சாவடி என 20 வாக்குச்சாவடி மையங்களின் பெயர் மாற்றம் (Change of Nomenclature) செய்யப்படவுள்ளன. மறுசீரமைப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தங்களது கருத்துக்கள்/ஆட்சேபனைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு பெறப்படும் கருத்துக்கள் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு இந்திய தேர்தல் ஆணைய வழிகாட்டு நெறிமுறைகள்படி இறுதி வாக்குச்சாவடி பட்டியல் தயார் செய்யப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆ.சிவகாமி, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.து.தங்கவேலு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு உட்பட அரசு அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**